# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 12,169 — 1960 ජූලි 29 වැනි සිකුරාදා — 29.7.1960

12,169 ம் இலக்கம்—1960 ம் ஆண்டு ஜூலை மாதம் 29 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனங்கள் .. .. | — | விலைக்கட்டளைகள் .. .. .. | 577 |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் .. | — |
| அரசாங்க அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை அரசாங்கக் கணக்கு விபரங்கள் .. | — |
| நீதாசன சேவை அதிகார சபையின் நியமனங்களும் பிறவும்.. | — | வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | — | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் .. | — |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — | மாதுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. | — | " மதுவரிச் சட்ட " அறிவித்தல்கள் .. .. | — |


## விலைக் கட்டளைகள்

உணவு விலைக் கட்டளை இல. எம்என்/6-1960 — ஆட்டிறைச்சியும் மாட்டிறைச்சியும்.

### 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்
### கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவோடு 3 (2) ம் பிரிவால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு மன்னார் மாவட்டத்தின் உப விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு) டொன் ஜோண் பிரான்சிஸ் டக்லஸ் லியனகே ஆகிய யான் இக்கட்டளையால்—

(1) இதன்கீழ்த் தரப்படும் அட்டவணையின் 2 தொடக்கம் 5 ம் பத்திவரை விவரிக்கப்பட்டிருக்கும் விலைகளை முறையே ஆட்டிறைச்சியினதும் மாட்டிறைச்சியினதும், அப்பத்திகளின்மேல் விபரிக்கப்பட்டுள்ள விபரங்களுக்கும் தரத்திற்குமமைய, நிகர இறாத்தலொன்றின் ஆகக்கூடிய மொத்த விலையாக 1960 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 5 ந் திகதியிலிருந்து நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன். இவ்விலைகளுக்குக் கூடுதலாக அவ்வட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்டுள்ள எவ்விலைகளுக்குள் விற்கலாகாது.

(2) இக்கட்டளையின் நோக்கத்திற்காக—

(அ) " ஆட்டிறைச்சி " யென்பது வெள்ளாடு அல்லது செம்மறியாட்டின், கழிவு உறுப்புகளைத் தவிர்ந்த, தசையாகும் ;

(ஆ) " மாட்டிறைச்சி " என்பது இந்தியா அல்லது உள்நாட்டு வளர்ப்பு மாட்டினது அல்லது எருமையினது, கழிவு உறுப்புகளைத் தவிர்ந்த தசையாகும்.

(3) ஆட்டிறைச்சியை அல்லது மாட்டிறைச்சியை எலும்புடன் விற்குமிடத்து, எலும்பின்நிறை இறைச்சியின் மொத்தநிறையின் 25 சத வீதத்திற்குக் கூடுதலாக இருக்கலாகாதென ஆக்ஞையிடுகிறேன்.

(4) ஆட்டிறைச்சியோ அல்லது மாட்டிறைச்சியையோ தம்வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலோ அல்லது எவ்வாகனத்திலோ வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும், அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில், அவற்றின் ரகங்களும், விபரங்களும், இக்கட்டளையால் விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகளுமடங்கிய விலைப்பட்டியலொன்றைப் பகிரங்க பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆக்ஞையிடுகிறேன்.

(5) ஆட்டிறைச்சி அல்லது மாட்டிறைச்சி கழிவு உறுப்புகளுடன் கலந்து விற்குமிடத்து, ஆட்டிறைச்சியோ அல்லது மாட்டிறைச்சியோ அவ்வகைக் கழிவு உறுப்புகளிலிருந்தும் வேறாக நிறுக்கப்பட்டு விற்கப்படல் வேண்டுமென ஆக்ஞையிடுகிறேன்.

(6) ஆட்டிறைச்சியையோ அல்லது மாட்டிறைச்சியையோ விற்கும் ஒவ்வொரு வியாபாரியும் தமது நிறுத்தலளவையையோ அல்லது அளவைகளையோ ஆட்டிறைச்சியை அல்லது மாட்டிறைச்சியை வாங்குவோர், தாம் வாங்கும் உண்மையான அளவினை இலகுவாக அறிந்துகொள்ளும்வண்ணம் அவ்வளவைகளை வைத்திருத்தல் வேண்டுமென ஆக்ஞையிடுகிறேன்.

(7) ஆட்டிறைச்சியை அல்லது மாட்டிறைச்சியை, மேற்சொல்லிய விபரங்களதும் ரகத்தினதும் தன்மைக்கமைய விற்கும் ஒவ்வொரு வியாபாரியும், அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து பின்வருவனவற்றைக் குறிப்பிட்டு அன்னாருக்குப் பற்றுச் சீட்டொன்று வழங்கல் வேண்டுமென ஆக்ஞையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த திகதி ;

(ஆ) விற்கப்பட்ட ஆட்டிறைச்சி அல்லது மாட்டிறைச்சியது அளவு (நிறையில்) ;

(இ) விற்கப்பட்ட ஆட்டிறைச்சி அல்லது மாட்டிறைச்சியது விபரமும், ரகமும் ;

(ஈ) விற்கப்பட்ட ஆட்டிறைச்சி அல்லது மாட்டிறைச்சியின் அளவிற்குக் கொடுக்கப்பட்ட விலை.

(8) ஆட்டிறைச்சியையோ அல்லது மாட்டிறைச்சியையோ வேறெந்தவகை இறைச்சிகளுடனும் கலந்து அவ்வெவ்விலைகளுக்குள் விற்கலாகாதென ஆக்ஞையிடுகிறேன்.

(9) அட்டவணையில் விபரிக்கப்பட்ட பொருட்களை விற்குமிடத்து, அவ்வட்டவணையின் 2 தொடக்கம் 5 ம் பத்திவரை விபரிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய விலைகளில் அவற்றைக் கொடுக்கும் உறை அல்லது கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையும் அடங்கவேண்டுமென ஆக்ஞையிடுகிறேன்.

(10) இக்கட்டளையின் நோக்கத்திற்காக " இருத்தல் " அல்லது " இரு " என்பது அவோர்டுபோஸ் எடுத்தலளவைமுறையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்படுமென ஆக்ஞையிடுகிறேன்.

1960 ம் ஆண்டு ஜூலை மாதம் 23 ந் திகதி மு.ப. 11.30 மணிக்கு மன்னாரில் கையொப்பமிடப்பட்டது.

டி. ஜே. எவ். டீ. லியனகே,
உப விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
மன்னார் மாவட்டம்.

## அட்டவணை

ஆட்டிறைச்சியினதும் மாட்டிறைச்சியினதும் ஆகக்கூடிய விலை

| பத்தி 1 | பத்தி 2 | பத்தி 3 | பத்தி 4 | பத்தி 5 |
|---|---|---|---|---|
| பகுதி | ஆட்டிறைச்சி (எலும்பின்றி) ஒரு இருத்தலின் ஆகக் கூடிய விலை ரூ. ச. | ஆட்டிறைச்சி (எலும்புடன்) ஒரு இருத்தலின் ஆகக் கூடிய விலை ரூ. ச. | மாட்டிறைச்சி (எலும்பின்றி) ஒரு இருத்தலின் ஆகக் கூடிய விலை ரூ. ச. | மாட்டிறைச்சி (எலும்புடன்) ஒரு இருத்தலின் ஆகக் கூடிய விலை ரூ. ச. |
| பாலம்பிட்டி, புளியடிஇறக்கம் கிராம விதானைகளின் பகுதிகள் : | 2.75 | 2.25 | 0.85 | 0.75 |

**குறிப்பு**—இவ்விலைகள் ஆட்டிறைச்சியையோ அல்லது மாட்டிறைச்சியையோ விற்கவேண்டுமென்று விதிக்கப்பட்ட விலைகளல்ல. இவை **ஆகக்கூடிய** விலைகளாகும். இவ்விலைகளுக்குக் கூடுதலாக ஆட்டிறைச்சியையோ மாட்டிறைச்சியையோ அவ்வெவ்விலைகளுக்குள் விற்கலாகாது.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது